**ஹற்றன்-டிக்ஓயா நகர சபை**
**நுவரெலியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 11 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹற்றன்-டிக்ஓயா நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நாட்குறிப்புப் பதிவின் மூலம் கணக்கீடு செய்யப்பட்ட அறவிட வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 645,475 தொகை மற்றும் ரூபா 1,074,594 தொகையான மூலதன நிதியுதவி, வருமான செலவினக் கணக்கில் செலவு வைக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்புப் பதிவின் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது |
| (ii) | ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 421,315 தொகையான வருமானம் மற்றும் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 174,700 தொகையான வருமானம் என்பன வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பின்னர் சரிசெய்யப்பட்டுள்ளது . |

**(ஆ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விரிவான பட்டோலை, மெய்மையாய்வு அறிக்கை மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் போன்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 12,223,996 கூட்டுத்தெகையான 04 கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) பெற வேண்டிய கணக்குகள் பற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(i) பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 வருடம் முதல் 29 வருடம் வரையான காலத்தை விஞ்சிய பெறவேண்டிய 04 கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 13,135,912 அறவிடப்படவில்லை. | பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 வருடம் முதல் 07 வருடம் வரையான காலத்தை விஞ்சிய ரூபா 174,468 தொகையான செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகள் தீர்த்து வைக்கப்படவில்லை. | உரிய மீதிகளைச் செலுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | காலாவதியான ரூபா 46,159 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,902,395 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 54,850,010 ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நுகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 158(4) ஆம் உப பிரிவின் பிரகாரம் செயற்பாடுகளின் மிகைப் பணம், அங்கீகரிக்கப்பட்ட சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ஆண்டு முழுவதும் ரூபா 44,000,000 தொகைக்கு மேற்பட்ட பணம் அவ்வாறு முதலீடு செய்யப்படாமல் 02 நடைமுறைக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். | கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக காணி, இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் நோக்கில் தேவையான எந்த சந்தர்ப்பத்திலும் பெறக்கூடிய வகையில் பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 17,250,000 | 18,023,950 | 15,554,625 | 7,499,127 | 12,250,000 | 17,671,816 | 15,285,476 | 5,030,602 |
| (ii) | வாடகை | 18,540,000 | 14,277,670 | 12,034,313 | 6,721,223 | 20,120,000 | 14,692,519 | 14,171,292 | 4,297,588 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 18,880,000 | 867,816 | 870,816 | - | 15,275,000 | 2,318,939 | 2,344,939 | 9,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 12,955,000 | - | 5,143,499 | - | 18,676,000 | - | 20,486,608 | - |
| | | 67,625,000 | 33,169,436 | 33,603,253 | 14,220,350 | 66,321,000 | 34,683,274 | 52,288,315 | 9,337,190 |

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 661,412 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 23,415,180 என்பன அறவிடப்படவில்லை. | | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் 03 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எந்த விடயத்திற்காகவும் மாத்திரமே உப விதிகள் விதிக்கப்பட்டிருக்க வில்லை. | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிட்ட பிரகாரம் தேவையான உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | உப விதிகளை விதித்தல் தொடர்பாக அங்கீகாரம் கோரி பிரதம அமைச்சருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

(ஆ) கலி பவுசர் சேவை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கலி கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கு இடமொன்று காணப்படாமையின் காரணமாக சபைக்குச் சொந்தமான கலி பவுசர் மீளாய்வாண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் மாத்திரம் சேவையினை வழங்கியிருந்ததுடன் ஏனைய காலத்தில் பயனற்றுக் காணப்பட்டது. | மீள்சுழற்சி பிரிவொன்றை நிர்மாணித்து கலி பவுசர் சேவையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | நீதிமன்றக் கட்டளையின் படி கலி கழிவுப் பொருட்களை அகற்றும் இடம் தடைசெய்யப்பட்டமையால் பொருத்தமான இடமொன்றை அமைத்ததன் பின்னர் மீண்டும் சேவை வழங்கப்படும். |

(இ) உயிரியல் வாயு உற்பத்தி செயற்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,964,375 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட உயிரியல் வாயு பிரிவு, செயற்படும் நிலையில் காணப்படாமையினால் கைவிடப்பட்டிருந்தது. | உயிரியல் வாயு பிரிவை செயற்படு நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏதர்காலத்தில் உரிய மேற்பார்வையுடன் செயற்திட்டத்தை நடாத்திச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

(ஈ) தையல் இயந்திர பயிற்சி நிலையம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபைக் கட்டிடத்தில் நடாத்திச் செல்லப்பட்ட தையல் இயந்திர பயிற்சி நிலையத்தில் பயிற்சி நடவடிக்கைகள் 06 வருடங்கள் அளவிலான காலம் முதல் செயற்படுத்தப்படவில்லை. 2019 சனவரி 24 ஆந் திகதி வரையில் 06 தையல் இயந்திர நிலையங்கள் பயனற்றுக் காணப்பட்டன. | செயற்திட்டத்தை செயற்படு நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலையத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நிலையமொன்று அமைக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் வேலை ஆரம்பிக்கப்படும். |

(உ) நெண பியச

| | | |
|---|---|---|
| ‘‘ஈ நெண பியச’’ நிலையத்தின் செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டதுடன் 2019 சனவரி 24 ஆந் திகதி வரையிலும் அதில் காணப்பட்ட உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பயனற்றுக் காணப்பட்டது. | செயற்திட்டத்தை செயற்படு நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலையத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நிலையமொன்று அமைக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் வேலை ஆரம்பிக்கப்படும். |

(ஊ) நிலைபேறான அபிவிருத்தி முன்மொழிவுகளை அமுல்படுத்துதல்

| | | |
|---|---|---|
| சபை நிலைபேறான அபிவிருத்தி முன்மொழிவுகளுக்காக 2018 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிப்பட்டிருந்த பாதீட்டில் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான போதியளவான நிகழ்ச்சித் திட்டமும் அமுல்படுத்தப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அமுல்படுத்துதல் வேண்டும். | 2019 இன் பாதீட்டு முன்மொழிவில் இந்த நோக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது . |

(எ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| 2017 செப்தெம்பர் 19 ஆந் திகதி கொண்டுவரப்பட்ட 10 கழிவுப் பொருள் பாத்திரங்கள் | விரைவாக பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க | ஏதிர்காலத்தில் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| பகிர்ந்தளிக்கப்படாமல் சபையின் வாகனத் தளத்தில் வைக்கப்பட்டிருந்தது. | வேண்டும். | எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குக் கையளிக்கப்பட்ட சபைக்குரிய ஹற்றன் விருந்தினர் விடுதிக்காக 2018 சனவரி முதல் திசெம்பர் வரை அறவிட வேண்டிய ரூபா 825,240 தொகையில் எந்தத் தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் கலந்துரையாடல் நடாத்தி எதிர்காலத்தில் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் 16 பதவிகளில் காணப்பட்ட 72 வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

### (ஆ) ஒழுக்காற்று நடவடிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபையின் களஞ்சியப் பொறுப்பாளர் 1996 திசெம்பர் 16 ஆந் திகதி முதல் ஓய்வூதிய பிரமாணக் கோவையின் 2:12 இன் கீழ் ஓய்வு பெற்றிருந்ததுடன் 2015 சனவரி 13 ஆந் திகதி மரணமடைந்திருந்தார். இந்த உத்தியோகத்தர் ஓய்வுபெற்று 21 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் உரிய ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தி அதன் பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் | ஒழுக்காற்று விசாரணைகள் விரைவாக பூர்த்தி செய்யப்பட்டு உரிய கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது ஓய்வூதிய நலன்களை வழங்குவதற்குரிய சகல பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

2019 சனவரி 24 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்படவில்லை.

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நகர சபை காணிகளை நீண்ட காலமாக வாடகைக்கு வழங்கும் போது 84 சந்தர்ப்பங்களில் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 36(உ)(II) பிரிவின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட 04 வானங்கள் 08 மாதம் முதல் 22 வருடங்கள் வரையான காலத்திற்கிடையில் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ, விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் வாகனத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) சபைக்குச் சொந்தமான டிக்ஓய நாகரத்தில் அமைந்துள்ள M.A.S. அபுசாலி மண்டபம் மற்றும் அதில் காணப்படுகின்ற உபகரணங்கள் ஆண்டு முழுவதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் மூடி வைக்கப்பட்டிருந்தது. | மீளமைப்புச் செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்குள்ள இயலுமையை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5.2 வானப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 14 வானங்களுக்குரிய 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நாளாந்த ஓட்ட அட்வணை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஓட்ட அட்வணை விரைவாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | குறைபாடுகளை பூர்த்தி செய்து எதிர்காலத்தில் ஓட்ட அட்வணை சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | இந்த 14 வாகனங்களுக்காக எரிபொருள் செலவினமாக ரூபா 5,749,895 தொகை மற்றும் பழுதுபார்த்தலுக்காக ரூபா 681,025 தொகைகள் செலவிடப்பட்டிருந்தன. ஓட்ட அட்வணை சமர்ப்பிக்காமையினால் இந்த எரிபொருள் செலவினம் கடமைகளுக்காக ஏற்பட்ட செலவினமா என கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | ஓட்ட அட்வணை விரைவாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | குறைபாடுகளை பூர்த்தி செய்து எதிர்காலத்தில் ஓட்ட அட்வணை சமர்ப்பிக்கப்படும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் அறிவுரையின் படி சபைக்குரிய 14 வானங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. | எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டு அந்த சிபாரிசின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |